(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 19.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 மார்ச் 24 வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

6/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் தொடக்கம் தம்புள்ளை வரையிலான நான்காம் கட்டத்தின் நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தத்திற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நெடுஞ்சாலையை அமைக்கும் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

39/2022

கௌரவ புத்திக பத்திரண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிறுவனங்களைத் தெரிவு செய்யும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு லொத்தர் சீட்டினை அச்சிடுவதற்கு மேற்குறிப்பிட்ட நிறுவனங்களினால் அறவிடப்படும் தொகை தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) லொத்தர் சீட்டுக்களை அச்சிடும்போது, 2014.12.31ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நிறுவனம் / நிறுவனங்களது விலைகள் மூலம் பாரியளவு நிதி முறைகேடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

254/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பழம்பெரும் நடிகர் திரு. சௌமிய லியனகே அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

574/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணி வங்கியொன்றைத் தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தாபிக்கும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கைக்கு உரித்தான வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பிலிருந்து உச்சளவான பயனைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1027/2022

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள பிரதேச செயலகங்களுக்கு மத்தியில் போதிய வசதிகளின்றி எத்தனை பிரதேச செயலகங்கள் இயங்கி வருகின்றன என்பது இனங்காணப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) குருநாகல் மாவட்டத்தின் அலவ்வ மற்றும் நாரம்மல ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களும் போதிய இடவசதியின்றி இயங்கி வருவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி இரண்டு பிரதேச செயலகங்களுக்கும் போதுமானளவு கட்டிட வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

1178/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தின் கீழ் வருகின்ற, திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1189/2022

கௌரவ நலின் பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “தாமரை கோபுரம்” கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1317/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஜப்பானுக்கான இலங்கைத் தூதரகத்தில், ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்புச் செயலகம் (Japan-Sri Lanka Joint Comprehensive Partnership Secretariat) பேணிச் செல்லப்பட்டிருந்தது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி செயலகத்தினை பேணிச் சென்றதன் நோக்கங்கள் மற்றும் அதனூடாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள நோக்கங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) குறித்த செயலகத்தினைப் பேணிச்செல்வதன் மூலம் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அனுகூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி செயலகத்தில் பணியாற்றிய பணியாட்டொகுதியினரதும் ஆலோசகர்களினதும் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இச்செயலகத்தில் பணியாற்றிய பணியாட்டொகுதியினரின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் அலுவலகத்திற்கான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் வெவ்வேறாக ரூபாய்களில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1475/2022

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர "கட்டியாவ பிரதேச வைத்தியசாலை" எனும் பெயரில் வைத்தியசாலையொன்று உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு நீர்வசதி இன்மையால் வதிவிட நோயாளர்கள் மட்டுமன்றி நாளாந்தம் வைத்தியசாலைக்கு வருகை தரும் பொதுமக்களும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலையின் நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1734/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வோர் ஆண்டிலும் பண்டப் போக்குவரத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு ஏற்றிச் செல்லப்பட்ட பண்ட வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) புகையிரதம் மூலமான பண்டப் போக்குவரத்தினை பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சு இன்றளவில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

கமத்தொழில் அமைச்சர்,— விலங்கின நலம்பேணல்,— விலங்கின நலம்பேணலை ஏற்பாடு செய்வதற்கும் விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுப்பதற்கும்; (475 ஆம் அத்தியாயமான) விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட முறையில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிதற்காக மேலும் கால அவகாசம் தேவைப்படுவதால், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் குறித்த பாராளுமன்ற விசேட குழுவுக்கு வழங்கப்பட்ட கால எல்லை, 2022 மே 31 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்படுமாக.

3.

கௌரவ ரோஹண பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"டாக்டர் எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் துருக்கி குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் நீக்குவதற்கும் வரி செலுத்தாது தட்டிக் கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்குமாக 2022 சனவரி 28 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2022.02.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கையானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

மிகைக்கட்டண வரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 72 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடன் ஆக்கப்பட்டு 2021 டிசெம்பர் 24 ஆம் திகதிய 2259/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2022 சனவரி 18 ஆம் திகதிய 2263/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213ஆ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 2245/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

9.

நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.